177689

அகிலாண்ட நாயகி
மும்மணிக் கோவை

Q25:417
N25
177689

86

உ

முருகன் துணை.

சூதவனமென்னும் தாருகாவனம்,

# அகிலாண்டநாயகி

# மும்மணிக்கோவை.

சங்கரன்கோவில், ஆணந்தா அச்சியந்திரசாலையில்,
பதிப்பிக்கப்பெற்றது.

1925.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
6 APR 1926
MADRAS

925:417
N25.

உ

முருகன் துணை

சூதவனமெனப்புராணங்கூறும்,

தாருகாபுரம்,

# அகிலாண்டநாயகி மும்மணிக்கோவை.

திருநெல்வேலி ஜில்லா ஆற்றூர்,

ஸ்ரீமான், திருச்சிற்றம்பலப்பிள்ளையவர்கள்,

குமாரர்

சங்கரன்கோவில்த்தாலூகா ஹெட் அக்கவுண்டாண்டு,

கௌமாரபக்தி,

**A. T. இராமலிங்கப்பிள்ளையவர்களால்,**

இயற்றப்பட்டு,

ஷை தாலூகா தாசில்தார் மகா-ா-ா-ஸ்ரீ ராவ்ஸாஹிப்,

**R. செல்லமய்யரவர்கள் விரும்பியவாறு.**

சங்கரன்கோவில் ஆனந்தா அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

1925.

OFFICE OF THE REGISTRAR ...
6- APR 1925
MADRAS

894.811
2865

177684

முருகன் துணை.

# முகவுரை.

பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் எனப்படும் பஞ்ச பூதங்களின் வடிவாய் பரமேச்சுரன் திருக்கோயில் கொண்டிருக்கும் மகாக்ஷேத்திரங்களான திருவாரூர், திருவானைக்கா, திருவண்ணாமலை திருக்காளாஸ்திரி திருக்கோயிலென்று சொல்லப்படும் சிதம்பரம் ஆகிய பஞ்ச தலங்களுக்கு ஒப்பாகச் சிறப்புற்றோங்கிய பாண்டிவளநாட்டினுள் பஞ்ச தலங்களிருக்கின்றன அவைகளாவன முறையே சங்கரநயினார்கோவில் தாருகாபுரம், கரிவலம்வந்தநல்லூர், தென்மலை, தேவதானம், எனப்படும் இவற்றுள் அப்புஸ்தலமாகிய தாருகாபுரம் என்பது தலைவன்கோட்டை ஜமீன் எல்லைக்குள் ஷை ஜமீன் சமஸ்தானத்தைச்சேர்ந்த சிவக்ஷேத்திரமாகும். ஈண்டு ஓர் மாவிருக்ஷத்தின் நீழலில் சிவபிரான் சந்நியாசி வேடம் பூண்டும் அம்பிகையை நீங்காது வீற்றிருந்து சேர சோழ பாண்டியர் என்னும் மூந்நில மன்னர்களுக்குள் ஏற்பட்டிருந்த வழக்கைத்தீர்த்து

அவரவர்களுடைய பூமியின் ஆளுகை வரம்புக்கு அத்துக்காட்டி மத்திச
மாயிருந்ததால் மத்திசநாதர் என்றும் பிணக்கறுத்தவீசர் என்றும் திருப்
பெயர் பெற்று திருக்கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கின்றனர். சுவாமி
க்கு வலப்பாகத்தில் திருவானைக்காவில் எழுந்தருளியதுபோல் அகிலா
ண்டநாயகி யென்னும் திருநாமந்தாங்கிய பார்வதிதேவியாரும் திருக்கோயில்
கொண்டு வீற்றிருக்கின்றனர். மகாவரப்பிரசாதராய் மாவிருக்ஷத்தடியில்
அம்மையப்பராய் எழுந்தருளியிருப்பதால் இத்தலத்தை சூதவன மென்றும்
பெரியார் கூறுவர். ஷை தலைவன்கோட்டை எஸ்டேட்டு ரிசீவராக இந்
நூலாக்கியோன் உத்தியோகம் வகித்திருந்தகாலத்தில் அம்மையாரரு
ளிருந்தியக்கவாக்கியதிந்நூல். உத்தியோகப்பொறுப்புடன் அன்பும் தெய்
வபக்தியும் சிறந்துள்ள இந்தாலூகாத்தாசில்தாராகிய திருவாளர், ராவ்
ஸாகிப் செல்லமய்யாவர்கள் இந்நூல் வெளிவந்தால் உலகுக்குப்பயன்
படும் என்றும் இதை வெளிப்படுத்த வேண்டுமென்றும் விரும்பியதால்
வெளியிடலாயிற்று.

**A. T. R.**
நூலாக்கியோன்

5—1—25

## சாற்றுக்கவிகள்.

திருநெல்வேலி கலெக்கட்டராபீசு உசூர்சிரஸ்தார் திருவாளர்
செந்தமிழ்ப் புலவர்,
L. குப்புசாமிஅய்யரவர்களியற்றியது.

நேரிசைவெண்பா.

மாதகில வல்லியும் மத்தீச ரும்மகிழச்
சோதி மணிக்கோவை சூட்டினான்—சீதமுறு
காமலிந்த வாறையான் கௌமார பக்திமிகு
ராமலிங்க வாணன் நயந்து.

திருச்சிராப்பள்ளி பிஷப் ஹீபர்காலேஜ் தலைமைத் தமிழாசிரியர்
பண்டிதர், ந மு வேங்கடசாமிநாட்டாரவர்கள்
இயற்றிய அறுசீரடிப்பாசிரியவிருத்தம்

சீர்வளருஞ் சூதவனத் தகிலாண்ட நாயகியாந் தேவிபொற்றாட்
சேர்வளருந் தமிழால்மும் மணிக்கோவை யன்புகனிந் தியற்றினானல்
பேர்வளரு மாறைநகர் வந்துதித்த திருவாளன் பிறங்கு சீர்த்திக்
கார்வளரு மீகையுளான் இராமலிங்க னெனும் பெயர்சால் கவிஞன்றானே.

சொக்கம்பட்டி சமஸ்தானம் தாளுபதி பொன்னம்பலம்
பிள்ளையவர்களின் மரபினரும் சங்கரன்கோவில்
ஆனந்தா அச்சியந்திரசாலை மானேஜருமாகிய
திருவாளர், மீ. கதிர்வேற்பிள்ளையவர்களியற்றியது.

விருத்தம்.

வெண்டாளஞ் செறிபழன மிசையிலகு நளினமலர் விரிய வேண்டும்
வண்டினங்கள் மனமகிழ மதுவுண்டு சோலையெலாம் வசந்தம் பாடுந் [ம்
தொண்டரெலாந் தண்டமிழிற் றொடைமலர்க ளடியணிந்து தொழுதுநிற்கு
கொண்டலுறழுஞ் சூதனைக் குமரியகி லாண்டவட்கே துணைமாய் மாதோ.

செந்தமிழ்த்தேவருண்மணக்குந் தீஞ்சொன்மணி யாலிசைத்த சிறந்தமாலைக்
கர்தவிந்த வையமெலாங் கமழுமதைக் காண்போரின் கட்குச் செய்ய
சுந்தரமா ரருட்சத்தி தோன்றுமவர் வேண்டுவாரந் தணவீற் சேரும்
இந்தபெருந் தாரிசைத்த வ்ராமலிங்க னருட்டிறமை யியம்பற் பாற்றே.

---

உ

முருகன் றுணை.

சூதவனமெனப் புராணங்கூறும்.

தாருகாபுரம்,

# அகிலாண்டநாயகி மும்மணிக்கோவை

காப்பு.

நேரிசைவெண்பா.

மாவார்ந்த சூதவன வல்லியகி லாண்டவள்மேற்
பாவார்ந்த மும்மணித்தார் பாடவே—நாவார்ந்த
செந்தமிழிற் றித்திப்பே தெள்ளமுத மாயொழுகத்
தந்தருளுந் தந்திமுகன் றாள்.

## நூல்.

### அகவல்.

மாதெண்பர் வாழ்க்கை தீதறப் பொலியுஞ்
சீதப் புனலார் தென்பாண்டி நாட்டின்
முன்னொரு காலத்துக் கன்னியா யுற்றுநீ
செங்கோ லோச்சிய திறப்பல வுணர்ந்து
முன்னோ ருரைத்த முதுமொழி கேட்டுள
வின்னில மாக்க ளின்னமு மொருகா
லுலகுயி ரனைத்து முயிர்த்ததின் பின்னருந்
தாயா யிருந்துநீ தனியர சாட்சி
செய்வது காண்பான் சிந்தை யிலன்பு
கூர்ந்தன ரென்றே கோமள மாகி
யார்ந்து திரண்ட வருட்டிருக் கோலந்

தாங்கியிப் புவனந் தாங்குறுந் தகவா
லகிலாண்ட நாயகி யெனப்பெய ரணியப்
பெற்றனை யாகிப் பிறங்கெழிற் பொழிலார்
நாதம லைச்சார் நண்ணுறுந் தண்ணிழற்
சூதவ னஞ்சூழ் தொன்மையாம் புவியில்
தாருகா புரமெனச் சாற்றிடு மூதூர்
சீர்பெற வோங்குஞ் செம்மையார் நன்று
டுற்று முவந்து முயரா சாட்சி
நற்றவர் போற்ற நயந்துநீ பூண்டனை!
யம்மா! யிதுநின் னருட்டிறப் பாங்கே
மதிரவி யனல்வம் மிசபரம் பரைசேர்
மூந்நில மன்னர் முரணறுத் தன்னோர்
தத்தமக் கின்ன தரணியென் றம்மா
மத்த மதியணி மத்தீச நாதன்
வகுத்த புவிதமை மற்றவர் புரக்க

## தாருகாபுரம்

நினக்கிந் நாடு நேர்ந்த தெவ்வாறு
யெனவோ ஐய மெனக்கெழு மம்மா!
சூட்சித் துரைத் தொடங்குறு காலை
யோரோர் நிகழ்ச்சி யுற்றதே யெனினும்
தெளிவுஞ் சிறிது இகழ்ந்தது விளத்துவல்
பிணக்கறுத் தருளிய பெம்மான் றனக்கென
இணக்கம தாக விசைந்தவம் மூவருந்
நன்கொடை யாக நயமுற வளித்த
புவியிது வாகும் போலுமற் றதனைப்
பேணி யிருக்கப் பித்தனு னிறைல்
இல்லறக் கிழத்தி யாகநன் கிசைந்து
முருகனோ டாம்பல் முகனெனுஞ் சிறுவ
ரிருவர்போ தாதென் றெண்ணரும் புவன
முற்றபே ருயிரெல்லாம் பெற்றபெம் மாட்டி
யெனநினைந் தன்பால் மனமுற வளித்துத்

தான்வெளி நின்று சதுர்மறை முழங்கப்
பார்த்தவர் நகைப்பப் பல்லிய மியம்ப
தாத்தீ யெனப்பல தாளமிட் டம்மா!
கூத்தே பயின்று குனித்தன னதனால்
நீயே செங்கோல் நீடுறப் பொலியத்
தாயா யிருந்துந் தாங்கினை யெனவே
யென்மனஞ் சொல்ல விசைந்ததச் செயலால்
தாயே நீயே தஞ்சமென் பேனே. (1)

---

வெண்பா.

என்பணியுஞ் சூதவனத் தெம்மான்மத் தீசனடிக்
கன்பணியும் பெண்மணியா மம்மணியே—தன்பணிசெ
யன்பர்க் கருளுமகி லாண்டவளே யல்லலறுத்
தின்ப மருளா யெனக்கு. (2)

## கட்டளைக்கலித்துறை.

எனைக்காக்க வேயெனச் செங்கையிற் சூலமு மேந்தியவள்
மனக்காவல் பூண்டுறு மெய்த்தவர்க் கேயருள் மாதங்கியாம்
புனைக்காவி னேர்குடப் பாலோங்கு மாவனப் பூங்குயிலா
மனக்கா னடையகி லாண்டவ ளாமெம தன்னையுமே. (3)

## அகவல்.

அன்னையா யுலக மனைத்தையு மளித்து
மின்னென வொளிரு மேதகு விளக்கே!
சொன்ன மயமே! துரியா தீத
நந்நிலை யளிக்கு ஞானநா யகியே!
நாத மலையி னயம்பட வோர்சார்
சூத வனத்தமர் சுந்தரக் கிளியே!
சராசர மனைத்துந் தந்தகற் றுவையே!

பாராசர முனிவன் பன்னருங் காலம்
பயின்றுஞற் றியதவப் பான்மைக் கிரங்கி
மாதவ வேட வடிவெடுத் தன்னாள்
வெளிவருங் கருணை யெந்தை மத்தீசர்
மிளிர் வலப் பாக மேவிய வணங்கே!
ஆரணி! நாரணி! யெனுமவர் தமக்குங்
காரணி யாகுநற் கற்பகக் கொழுந்தே!
எண்ண லார்புர மீடற வழித்த
அண்ண லார்விழை யன்பினுக் கரணே
அண்டம னைத்து மடுக்கியோர் சிற்றி
லாண்டு செய் தாடு மொப்பிலா வனமே!
நறவும் புலையும் மறமுங் களவு
மறவொழித் திடுவார்க் கருளறக் கொடியே!
மகிதல முய்வான் வைத்திடு மளியால்
அகிலம னைத்து மாண்டநா யகியே

நின்னடிக் கன்பும் நேயமும் பூண்டு
கன்மனங் கரையக் கசிந்துநின் றுருகி
மறைசொன வழியான் வழிபடும் படியும்
இறையள வேனு மறமுறை யில்லா
தழியுங் குணமும் பழிபா தகமும்
வழிவழி யாக விழிவுறப் பயிலுங்
கொடியர்தம் முறவே கூடா வணமு
நெடியநின் கருணை நீடுற வருளே. (4)

## வெண்பா.

அருளுருவா யுற்றவகி லாண்டவளே மூவர்
மருளறுத்த மாவனத்தார் வாழ்வே—தெருளுறுவார்
சிந்தை குடியாகத் தெவ்வர் வலிகுன்றச்
சிந்துவாயன்னை தினம் (5)

## கட்டளைக்கலித்துறை.

தினந்தின நின்றிருப் பாதார விந்தத் தெரிசனையா
லினங்குலஞ் சுற்றமு முன்னேழு ஜென்மத் திழைத்தபவக்
கனங்குறைந் திம்மையில் வீடெய் தலாமெனக்கண்டுகொண்டேன்)
வனங்கிளர் சூத வனத்தகிலாண்ட மனோன்மணியே. (6

## அகவல்.

மணியென வொலிக்கு மதுர வாசகனைப்
பணிகொளக் கருதிப் பானிற வேறுவிட்
டரியயற் கெட்டா வண்ணலார் தம்மைப்
பரிமிசை யேறவும் பார்த்திருந்தனையா
லென்பணி கொளவு மிசைந்தொரு செயல்விட்
டன்புற மற்றோர் செயலவர்க் குதவக்
காத்திருப் பாயெனக் கருதியே யம்மா

தோத்திர மாகவித் தொடையல்கொண் டேற்றேன்
தீயவ ரிருந்த திரிபுரஞ் செற்ற
தூயவன் பக்கத் துணையென வமர்ந்த
நாயகி தனக்கது நவிற வேண்டாவே
எப்பொழு துந்தவ விடழித் திடுவான்
மும்பகை யாக முன்னெழுந் தடருங்
காம முதலாய்க் கருதுமுத் தீயோர்
நாமமெ னும்புரம் நாசம தாக்கி
வீடெனு மின்ப மேவவோர் தாகங்
கொண்டவ னாகிக் குவலயத் தெங்கு
முண்டதே யுண்டு முடுத்ததே யுடுத்துங்
கண்டதே கண்டுங் கழித்தனன் பன்னாள்
பஞ்ச தலத்திற் பறிவொடுஞ் சென்றால்
விஞ்சுமத தாகம் விடுமெனச் சொன்னா
ருலகவர் சொல்லை யுறுதியென் றெண்ணி

நலமுற மண்பா னண்ணுசங் கரனார்
வீற்றிருந் தருளும் வீதியிற் சென்று
போற்றி நாளிற்கப் பொருக்கென வந்தார்
எனக்குறு வேட்கை யின்னதென் றியம்பத்
தனக்கதி காரஞ் சற்றுமின் மையினால்;
முனங்கின ராகி மோனமாய் நின்றார்
ஆங்குற் றார்சில ரம்மைகோ மதியாள்
பாங்கே செல்லப் பகர்ந்தனர் சென்றேன்
மயக்கந் தீர மருந்தளி யென்றேன்
மண்ணுண்டை தந்து வாயிடச் சொன்னாள்
எண்ணிநன் காய்ந்து மின்னதென் றுணரேன்
மயக்கந் தீர வந்தவன் றனக்கு
மயக்கத் தாலே மாலுண்ட கட்டி
மண்டர லாகு மெனமறுத் தனனே
தாகங் கொண்ட வத்தன்மை பெற்றார்க்கு

மோகப் பிருதிவி முன்னது தீரா
உலவைத் தென்மலை யுயர்பதிக் கேகில்
அலைவும் வறட்சியு மதிகமே யாகும்
குளக்க ணிறையமர் கோலமார் கோயிற்
களவனஞ் சென்றுற் கதுமெனச் சுடுமே
உண்ணீர் வேட்கை யுற்றது தணியத்
தண்ணீர்ச் சாரல் சார்வது தகுமெனச்
சாற்றியுன் பாலே சார்ந்திடச் சொன்னாள்
நாற்றிசை யோரும் நாடொறும் போற்றும்
யண்டிதை மாற்றம் பரமென வெண்ணி
வண்டிசை பாடு மாவனத் துன்பா
லண்டின னதனு லகிலாண் டவளே
முன்னே சொன்ன முப்பகை தனையு
பின்னே நின்பால் விற்றிருந் கருளும்
அண்ணலைக் கொண்டோ வன்றிநின் கருணைக்

கண்ணாத னாலோ காய்ந்தருள் செய்து
மேவுநின் சரணாம் வீடுறும் வண்ணம்
பாவியேற் கருளும் பரமுனக் காமே. (7)

வெண்பா.

பாவுணர்வு சற்றுமிலாப் பாதகரோ டின்னு
மிரவு பகல் கூடியுழல் வேனோ—அரவுபுனை
சூதவனத் தீசர் துணைவியகி லாண்டவள்பொற்
பாத மலர்த் தொண்டிருக்கப் பார்த்து. (8)

கட்டளைக்கலித்துறை.

பாரா தவருந் திருக்கோயில் தேடிப் பரவிவாச்
சீரா கவேயுன் பணிவிடை யாற்றுந் திறமருளாய்
பாரா ருசூத வனத்தோங்கு பச்சைப் பசுங்கொடியே!
நாரா யணன்றங்கை யே!யகி லாண்டநன் னாயகியே. (9)

## அகவல்.

நாயக னாக நடுவே பொதுவில்
மேயின னாக விளங்கின னெனினும்
நீதியொன் றில்லா னிருமல னுன்பதி
கல்லா லெறிந்தும் வில்லா லுதைத்த
பொல்லார் தமக்கே நல்லா னானான்
அன்புற வடியர்க் கனுதின மன்ன
மின்புற வளிக்கு மன்பன தருமைப்
பிள்ளையை யறுத்துத் தள்ளவுஞ் செய்தான்
துள்ளப் பலவுயிர் விள்ளப் படுக்குங்
கொலைபயில் கொடிய புலையயில் வேடற்
குலைவிலாப் பதவி நிலையுற வளித்தான்
ஆயினுஞ் சூத வாணிய மதன்கண்
கோயில் கொண் டருளுங் குறிப்புள னாக

மாறு பரண மகிபனுக் கொரு சேய்
தானே யருளிய சயம்புவே யாகி
யுற்றவன் பாகம் பெற்றசி மாட்டி
யாகியிவ் வகில மனைத்தையுங் காக்குங்
கோகிலம் போன்று குலவுபொற் கொடியே!
தாயே! நீயே! தஞ்சமென் றுன்பால்
நாயினுங் கடைய பேயென வலறித்
தீயனேன் வந்து இறமது நோக்கி
யிருநிலம் வியப்ப யெனக்குமப் பேறு
பரிவொடு தந்த பரிசென் பகர்வேன்
தாயையுங் கூடத் தாரமென் றெண்ணுந்
தீயர்தங் குழுவே செறியுமிக் கலியில்
நல்லார் பொல்லார் நலமிட ரறியாக்
கல்லா மாக்கள் கதுவிய வுலகி
லெல்லாம் வல்ல விறைவியின் பெருமை

தெரிபவர் சிலராற் றெளிவுற வெவர்க்குந்
தெரிப்பான் கருணை செய்தனை போலும்
ஆதலி னம்மே யகிலாண் டவளென
வோதுறு நாம முனக்கலோ தகுமே. (10)

### வெண்பா.

தகுதியாய் மாவனமுஞ் சந்ததியு முண்டே
புகுதலேன் பிச்சை புராரி—நகுதல்
புரியு முலகமெனப் புத்திசொலாய் போலு
முரியவகி லாண்டவளே யுற்று.

### கட்டளைக்கலித்துறை.

உற்றா ரினந்தன மொன்றறி யாத வொருவனையே
பெற்றாய் பதியென மாவனத் தேபல பிள்ளைகளைப்
பெற்றா யுலகத் துயிர்பல வாகவப் பிள்ளைகட்கு
வற்றாப் புனலகி லாண்டவ ளூட்டி வளர்ப்பனையே (11)

## அகவல்.

வளம்பல செறியும் வண்டமிழ் நாட்டில்
தளம்பல விரியுந் தாமரை முகட்டி
னன்னம் பெடையொடு மன்புறப் பொலியு
நன்னயப் பழன நாற்புறஞ் சூழ
நாத மலையே நடுநா யகமாக்
கோதறக் கொண்டு குலவுறுந் தலைவன்
கோட்டையா மானுங் கொல்விபா றகழுங்
காட்டார் கோட்டைக் கவின்மலை யாற்ற
வாட்டம இன்றி யூட்டி வளர்க்கும்
சிறுக்குளப் புரவுஞ் செந்நெல்முப் போகம்
வெறுக்கைநன் கீய விளைத்தரு மம்மன்
மூழ்கியாம் புரவு முதுநிலச் செல்வி
வாழ்கி லாண்ட புரவளப் புரவும்
காரையுந் தடவிச் கமழ்தரும் பொழிலார்
பாரைக் குளமெனப் பகர்தரும் புரவு
மாகவே கோட்டை அன்பத் தாறுடன்

மரக்கால் பதினெண் விரைபடி யிரண்டா
யள்வுழிகொள் நன்செய் விளைநில னோடு
கற்பகந் தெங்கு கமுகொடு மாவாய்ச்
சொற்படுந் தோப்புந் துறவுமி ருந்தும்
நச்சர வம்புனை நாதன்மத் தீசன்
பிச்சைக் கென்றே இச்சித் திடவுங்
காரண மியாதெனக் கழறலா மம்மா!
தீரவே யாய்ந்து தெளிதரும் போது
எங்கு; நிறைவா யாவையு நடாத்தும்
பங்கி லமர்ந்த பாவைநீ போலும்
சொற்றரு மெண்ணிற் றுன்னிய மாக்கள்
பெற்று வளாகிப் பிறங்கியு நெல்லோ
விரண்டே நாழி யெடுத்தற முப்பத்
திரண்டும் வளர்க்க வெண்ணினை யதனு
லதுகொண் டாக்கும முதவர் தமக்கே
போதா தென்னப் புந்தியினி னைந்து
தாதா வென்னத் தான் பலியேற்கத்

துணிந்தான் கொல்லோ! துணிநில வணிந்தான்
பணிந்தார் தமக்குப் பாக்கியங் குறைவறக்
கொடுத் தருள் செயுமுன் கூற்றி யானே
யடுத்துப் பழகிய மகிலாண் டவளே
மடுத்து முல்மத்த மதியுடை யானே. (13)

வெண்பா.

மதியுடையார் வந்திக்கு மாவனத்தின் செல்வி
ததியறிந்திங் கென்னையுமே தாங்கு — நிதியுடைய
ளண்டமெலாங் காக்கு மகிலாண்ட தேவியருள்
கொண்டுறலா மெப்பகையுங் கொன்று. (14)

கட்டளைக் கலித்துறை.

கொன்றுயிர் தின்றிடும் பொய்த்தவ வேடரைக் கும்பிடுவார்
கன்றுயிர்வீயப் பசுக்கறந் துண்ணக் கருதிடுவார்
சென்றுழறீய நெறிக்கட் படாதருள் செய்திடுவாள்
வென்றிகொள் சூதவனத்தகி லாண்ட விமலையுமே. (15)

177689
Q25:417 M12

## அகவல்.

விமலையா யெங்கு மேவியுந் தவளக்
கமலையா யுலகங் கலைபல படைத்துங்
கமலையாய் நின்று கருணையிற்காத்து
மமலையாய்ப் பின்ன ரழித்துத் துடைத்துஞ்
செய்யுநின் னருளாந் திருவிளை யாட்டின்
மெய்யுணர் வில்லாக் கையுறு மாக்கள்
நெறிகெட் டுழலு நியமத் தினராய்ப்
பொறிவழித் தத்தம் போதம் விட்டந்தோ!
அலைபவர் வலியுமாக்க முங் குன்றி
யுலையவு நின்றூ ளுன்னுறு மடியர்
தலைமையுங் கொற்றமுஞ் சதுருற வெய்தவு
முத்தலைச் சூலங் கைத்தலந் தாங்குஞ்
சத்திநீ யென்னுஞ் சத்திய முணர்ந்த
வுண்மை யாகு முத்தமர் தமையே
கண்மணி யாகக் காத்தருள் புரியும்

வண்டார் சூதவனத் திறை தன்பாற்
றண்டார் சூட்டித் தயங்குறு மணியே
அண்டத் தறுபொருள் பிண்டத் தொளிரல்
கண்டிருந் தடியர் காணுறும் வண்ணம்
காட்டி மறைக்குங் கனமாய வித்தை
நாட்டி வியற்று நாடகக் காரி
பாட்டணி கொண்டு பரவுவார் தமக்கு
நாட்ட மனைத்து நயமுற வுதவுங்
கற்பகத் தருவே ககனத்தே நட
மற்புறப் புரியுமகி லாண்ட நாயகி
பொய்ம்மை யாமுலகப் பொருடனை நம்பிக்
கையர்த முறவே கருதுறு வேற்குஞ்
செய்யபூங் கமலச் சேவடி காட்டி
யுய்யுமா றம்மா! வுவந்தினி தருளே. (16)

### வெண்பா.

இனுமேயனிஞ் சென்ம மெடுத்துழலா வண்ணந்
தனியே யிருந்துனருள் சார—நினையா
தலைவரை சூதவனத் தண்ணலார் பாகங்
குலவுமகி லாண்டவளே கூறு. (17)

### கட்டளைக்கலித்துறை.

கூற்றுங் குலைகுலைந் தோடும் படிக்கருள் கூர்ந்துதவு
மேற்றந் தருபுவி யீரே ழுலகமு மேத்தெடுத்துப்
போற்றுந் தாந்தரு மாவனத் தேயெழில் பூத்தொளிருந்
தோற்றந் தருமகி லாண்டவள் பாதத் துணைமலரே. (18)

### அகவல்.

மலர்மிசை யயனை வன்சிறைப் படுத்தி
யுலகப் படைப்புக் கோய்வற வருளிப்
பிரணவப் பொருளைப் பிஞ்ஞகர்க் குகவிய
சரவண பவனே தந்தியா னனனே

யெனச் சொலும்புதல்வ ரிருவர் தம்முள்ளும்
மனக்கினி தாகு மைந்தநிற் கெவனோ
தாயென நின்பாற் றயங்கிய வன்பும்
நேயமும் வைத்தநி காரும் புதல்வன்
சண்முக னென்பார் சதுர்மறைப் பொருளா
இம்மையை விளக்கு முயர்சிவா கமத்தி
னுட்டெளி வனைத்து மொருங்கே திரட்டி
நட்டம் பயிலிறை நல்குமந் தருணம்
பராமுக முறநீ பரகமன் மகளாய்த்
தபாதர மின்றிச் சார்ந்திடு மாறு
சாப மறைந்தவத் தன்மையை நோக்கிக்
கோபங் கொண்டான் கொடுவிட முண்டே
தகவொன் றில்லாச் சங்கரன் கோபம்
புகுதாவிடத்துப் பொறை யுடையார் போல்
குஞ்சர முகனை யஞ்சியே விட்டு
வஞ்ச மனத்தால் மற்றொரு கொடுமொழிச்
சாபந் தனக்கே தருமென வறிந்தும்

நீபத்தாரான் நெஞ்சந் துணிந்தே
யாரிய னெறிய வாகம மனைத்தும்
வாரிதி தனிலே வாரி யெறிந்த
காரணங் கண்டே கழறினர் போலும்
பிள்ளைக ளிருவர் பிழைத்தன ராகில
கள்ளவிழ் கொன்றை கங்கை முடித்து
மொருவனை விடுத்துமற் றொருவனைத் தண்டம்
புரிவது தானோ புராரியி னீதி
யென மனம்வருந்து மிளையவனுக்குந்
தனையனென் றன்பாற் றாங்கினை நீயும்
பித்தே பிடித்துப் பேயுடனாடு
மத்தனைப் பெற்ற வறுமுகற் குன்போ
லாதர வுடையா ரியாருமிங் கிலரே
மற்றது நோக்கி மாவனஞ் சூழப்
பெற்றநின் கோயிற் பிறங்குமக் குகற்கு
விழவொடு பூசனை விதிப்படி யாற்றிப்
பழகினன் கொழுகும் பாக்கியம் பெற்றான்

அறம்பொரு ளின்ப மனைத்துந் துய்த்துத்
திறம்பட வீடாஞ் செல்வமு மெய்த
மகிதல மனைத்தும் வாழ்த்த நன்றே
யகிலாண் டவளே யருளுவை யினிதே. (19)

வெண்பா

இனிக்குஞ் சுவையமுதா மென்மாட்டு மன்பு
செனிக்கும் படியருளுந் தேவி—தனிக்கு
மடியார்க் கருளுமகி லாண்டவளாய்ச் சூதங்
குடியாக வீற்றிருப்பாள் கொண்டு. (20)

கட்டளைக்கலித்துறை.

கொண்டாட்ட மாக வடியார்க்கு நின்னையே கூறிடுவார்
இண்டாட்ட மெய்திடச் செய்திடுஞ் சூலி திரிபுரையாம்
வண்டாட்டஞ் செய்திடு மாவனத் தெய்வமரு மானுடனே
பண்டாட்டஞ் செய்த வகிலாண்டவல்லி யாபரையே. (21)

அகவல்.

பாந்தாத் தடமெனப் பங்கய முகட்டி
வீருந்திடு தேவு மிலக்குமி கேளு

# தாருகாபுரம்

மரந்தை கொண்டண்ண வவரிறு மாப்பும்
பொருந்திய வீறும் போக்குவான் வைத்த
வளியாற் றுறே ரனலொரு வாகியுங்
குளமுற வனலுங் கொதித்தெழு நஞ்சங்
களமுற மழுவுங் கரமுற திருவியும
மேனியூ டெங்கும் வெப்ப மீதுற்ற
வானவர்க் கெட்டா மத்தீச நாதன்
பானிற வேற்றுப் பசுபதி தன்னை
கண்ணகல் ஞாலங் களைகற வின்று
தண்ணெனுமை பச்சைக் தளிர்மென் கொடியாம்
நண்ணுக வெவ்வா றெனநன் காய்ந்தே
க்ண்ணுதல் வந்துன் கரப்பிடிக் திடுமுன்
அண்ணலார் தம்மை யப்புரு வாக்கினை
கொல்லோ! தாயே குலவிய வகில
மெல்லா மருளா வின்றுகாத் தளிக்கும்
வல்லப முடைய வல்லிநிற் கீதோர்
சொல்லருஞ் செயலாய்ச் சொல்வதும் பழுதே

கருதுறுங் கொடிய கரியமா மலமா
மாவின்வாய்த் தேரை யாகிபின் கலமர்
தவளியிற் பொன்மண் ணரிவைய ரவாவாற்
பவமாம் பெளவப் படுகுழி வீழ்ந்து
தவநிலையற்றுத் தளருறுங் கொடிய
வெப்பநோ யுற்று மெலிவுறு வேனை
ஒப்பரும் பெரியா ரொண்மலர் தூவி
அற்பொடு வழிபடு மம்ம நின் செய்ய
பொற்புறுங் கமலப் பூங்கழ னிழற்கீழ்
தன்னுற விருத்திச் சதுருறும் படியாய்ப்
பண்ணநற் கருணை பண்ணுவை யினிதே (22

வெண்பா.

இன்னும் பிறவி யெடுக்காமற் காத்தருளி
மன்னுங் கதியே வழங்குவாள் — அன்னம்
முகமேடறித் தாதவிழ்க்கு முண்டகமார் பொய்கை
யகடேறுஞ் சூதவனத் தாய். (23)

## கட்டளைக் கலித்துறை.

ஆயே தினம்படும் பாவியே னல்ல லறுப்பதற்கு
நீயே துணையென நம்பிவந் தேனுனை நேயமுட
னேயா தாற்றி மலர்கொண் டருச்சித் தருகலன்றிப்
பேயேன் புரிவ தெனையினி லாண்டருட் பெண்மணியே. (24)

## அகவல்.

மண்ணக முற்றும் வளர்க்குநின் கருணைக்
கண்ணென தம்மா கவலையை யொழிக்க
வெண்ணம் வைத்திலை தாவேழையென் செய்வேன்
விண்ணவர் பதமும் வேட்டிலே னன்றி
மண்ணிருந் தாள மதித்திலே னல்லேன்
பண்ணவர்க் கலக்கண் பலபுரிந் தன்றாள்
கண்ணகல் புவனங் கணக்கிலா வண்ட
மரசியல் புரிந்த வசுரர்தங் கோமான்
சூர்வலி தடிந்தவுன் சுதனரு ளொன்றே
பேரும் பொருளாய்ப் பேணியே யுற்ற

தன்மையா வின்னே சார்ந்தன னுன்பால்
புன்மையார் கவலை போந்ததற் கிண்டைக்
காதலப் பெருக்கே காரண மென்றும்
வாதைப் படுத்து மனமப லற்ற
ஞான பொன்றே நன்மருந் தென்று
மோதினர் பெரியா ருண்மையி னம்மா
ஞான மருளு ஞான நாயகியே
நீயே யென்ன னிலவுல கெல்லாம்
வள்ளத் தமுதம் மழலைவாய்க் காழிப்
பிள்ளைக் கருளிய பெற்றியா லறியு
மாதலா லதனை யகிலாண் டவளே
மாதவி காந்தள் வண்டா மரைமுதற்
போதெலா மெங்கும் புதுமணம் வீச
வங்கா மாத ரங்குள மலர்க்கு
மிந்த நறுமண மிலையெனல் கண்டு
வருதனர் மண்ணில் மருமலர் கொய்து
கந்த மிகுதியின் காரண மாய

வெந்தை மத்தீச னிடமிருந் தொழுகு
மறலுட னம்மே யணியுநின் சாந்தும
நிறைபடு களப நெய்யுங் கலந்து
பாயும் பொய்கைப் படுநீர்ப் பாங்கர்
மேய மலரால் மேயதம் மனைமென
வோர்ந்தன ராகி யும்பரிற் செலவு
மன்னவர் பின்னே யடுத்தவ ருலகின்
மன்னிநீ ரெம்பால் வந்தவ ருண்மென
வண்பொடு கனிவை யின்புற வீயுந
தன்மையி லோங்கித் தண்ணிழல் பரப்புஞ்
சூதமா நீழற் றுலங்குறுங் கோயில்
சீதமார் பீடந் திகழுறப் பொலிய
வீற்றிருந் தருளு மேம்படுந் தாயே
போற்றுறு மெனக்கும் புரிந்தரு ளாயே. (25)

வெண்பா.

புரிவா ரெவருனக்குப் பொய்யில்லா வன்பு
தெரிவா ரவரடிக்கீழ்ச் செல்வேன்—திரிவார

மைவரு மம்மா! வகிலாண் டவளேயென்
கைவரவே செய்வாய் கனிந்து. (26)

## கட்டளைக் கலித்துறை.

கன்னியென் றுன்னை மறையெலாங் கூவிக் கரைந்திடினுங்
பன்னியா யெந்தையார் மத்தீசர் பாங்கிற பாங்குடனே
மன்னினை யீதென்ன மாய முனார்கில மாநிழற்கீழ்
துன்னிய தேவி யகிலாண்ட நாயகி சொல்லுவையே (27)

## அகவல்.

சொல்லுக் கடங்காத் துரியா தீத
வெல்லையின் ஞடு மிறையவர் தமக்கு
மன்னிய பூசை மறைநெறி வழாது
நன்னிய மத்தால் நால்வகை மலர்கொண்
டன்புற வம்மா! வாற்றினை யதுபோ
லின்புற யானு மியற்றுதற் குன்னி
யுன்மகன் றன்னை யுபாசித் திடவு
மின்முகமாக வெனக் கருள் செய்த

பானிற மேனி பரமனுக்க
சிவமெனப் பெயரிய திக்கா ளாடகத்துச்
சதாசிவ வுருவிற் சமைந்தருள் மொழிக்கு
மூர்த்திகளைப் பெற்ற முகூர்த்தங் கொட்டே
நாதநிக ருரையும் காமினி மிடமென்
றோத்துரை யுன்றா யோதுவா ருரையுஞ்
சாத்திர முறைராச் சாக்கிய ருரையு
மூத்தர மன்னை முழுப்புழுக தரமைப
கிடத்துக ளாய கெட்டுன்ப புரிய
மென்பதை யுணர்ந்தே யிறைவன் பூசை
யன்புறத் தினமு மாற்றிடேய திறமே
னென்பது மறியா விசையினீ யல்லவே

மன்னிய சூதவனப்பதி முனது
சந்நிதி நோக்கிச் சார்வதற் காசை
துன்னிய நோக்கஞ் சொலுவல் கேண்மதி!
பாயும்புலி யெனப்படு புலேந்திரன்
காயு மாற்றற் றுயுமா னவர்முதல்.

இன்னிசைப் புலமை மன்னிய பெரியார்
முன்னர்ப் புகழ்ந்து மொழிந்த சித்தாந்தத்
துண்மைப் பொருளை யுணர்ந்தச ணடிக்கீழ்
நண்ணியந் நீழல் நலமுற விருக்கு
மின்புறு முத்தி யெளியனேன் பெறவே
வன்புட னகில மனைத்தையு மீன்று
மின்னமுங் கன்னி யெனமறை போது
மன்னமென் மென்னடை யகிலாண் டவளே
யன்னதிப் பொழுதே யருளுவை யினிதே (28)

வெண்பா.

தேவார்ந்த வஞ்செழுத்துஞ் சீரார் திருநீறும்
பாவார்ந்த வேதப் பழந்தமிழும்—மாவார்ந்த
வீதிகமழ் சூதவனர் மேவுமகி லாண்டவளே
சோதிமலர்த் தாளருளாய் சொல். (29)

## கட்டளைக்கலித்துறை.

சொன்மாலை நாளுநின் பாதார விந்தத்திற் சூடுதற்கு
நன்மாலை யாணெய்தல் கண்டெனக் கேகதி நன்கருளாய்
பன்மாலை வேய்ந்திடு மன்பர்க் கருளும் பராபரையே
மன்மாலை மேவப் புரிபகி லாண்டவெம் மாதரசே. (30)

மும்மணிக்கோவை
முற்றுப்பெற்றது

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 8 | 8 | உறைத்த | உரைத்த |
| 10 | 15 | ருயிரெல்லாம் | ருயிரெலாம் |
| 16 | 14 | பறிவொடுஞ் | பரிவொடுஞ் |
| 18 | 15 | விற்றிருந் | வீற்றிருந் |
| 21 | 3 | சயமபுவே | சயம்புவே |
| ,, | 16 | விறைவியின் | விறைவினின் |
| 23 | 5 | பெடைபொடு | பெடையொடு |
| ,, | 9 | கொல்விபா | கொல்வியா |
| ,, | 13 | விளைத்தரு | விளைதரு |
| ,, | 15 | வாழ்கி | வாழகி |
| 28 | 3 | இனுயேனி | இனியேனு |
| 30 | 6 | பிளைத்தன | பிழைத்தன |
| ,, | 8 | தண்ட | தண்டம் |
| 33 | 3 | மாவின் | மரவின் |
| 34 | 8 | வளர்கரு | வளர்க்கு |
| ,, | 11 | விண்ணலர் | விண்ணவர் |
| 36 | 8 | யடுத்கவ | யடுத்தவ |
| 38 | 16 | கேண்ம | கேண்மதி |

177689
Q25:417

916
11-168